# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் டிசம்பர் திங்கள் 6–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

<u>முன்னிலை</u> : திரு.ஜே. ஜேசையா, பி.எஸ்ஸி.,டி.பி.எம்.,
நகராட்சி மன்றத் தலைவர்.

## பொருள்கள்

**பொருள் எண். 1**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்கள் 17, 24 மற்றும் 18, 25 –க்கு இடையேயுள்ள இடைச் சுவரினை நீக்கித் தருமாறு மேற்படி கடையின் வாடகைதாரர்கள் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி சுவரினை இடித்து மாற்றுவதற்கும், திரும்ப கட்டுவதற்குமான செலவினம் ரூ.3500/–னை முன்பணமாக செலுத்துவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அ.குறிப்பு** அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி சுவரினை இடிப்பதற்கும் அதற்கான முன்பணத் தொகை ரூ.3500/– செலுத்தவும், மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 21 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பம்பு ரூம்கள் 4 எண்ணம் வெள்ளிப்பிள்ளையார் கோயிலிலிருந்து இராஜாக்கமங்கலம் செல்லும் வழியில் அமைந்துள்ளன. இவற்றில் பம்பு ரூம் எண்கள் 2 மற்றும் 3 மேற்படி சாலையின் நடுப்பகுதியில் அமைந்துள்ளன. இந்த பம்பு ரூமில் இணைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகள் சுனாமியால் பாதிப்படைந்து உப்பு நீராக மாறியுள்ளது. இதனால் உபயோகப்படுத்தப்படாமல் மோட்டார்களும் கிணற்றிலிருந்து அகற்றப்பட்டு விட்டன. எனவே தற்போது மேற்படி பம்பு ரூம்கள் உபயோகத்தில் இல்லாமல் உள்ளன. திட்டப்பணிகளை ஆய்வு செய்த நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் செயல்பாட்டில் இல்லாத மேற்படி இரண்டு பம்பு ரூம்களையும் இடித்து அப்புறப்படுத்த அறிவுரை வழங்கியுள்ளார்கள். எனவே பயன்பாட்டில் இல்லாத பம்பு ரூம் எண்கள் 2 மற்றும் 3 –னை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : தார் சாலை அமைக்க வேண்டியுள்ளதால் சாலையின் குறுக்கே அமைந்துள்ள பயனற்ற மேற்படி 2 மற்றும் 3 எண் பம்பு ரூம்களை இடித்து மாற்றலாம்.

**தீர்மானம் எண். 22 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு 2006–2007–ம் ஆண்டுக்கு சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.28474/2006/ UPA-2 நாள் 31.05.2006–ன்படி :ரூ.4.12 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ. 2.07 லட்சம் வரப்பெற்றுள்ளது. கீழ்கண்ட தலைப்புகளின்கீழ் வரப்பெற்ற தொகை மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | தலைப்புகளின் விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | வரப்பெற்ற தொகை |
|---|---|---|---|
| 1 | நகர்புற கூலி வேலைவாய்ப்பு | 0.81 | 0.40 |
| 2 | நகர்புற வேலைவாய்ப்பு திட்டம் | 0.43 | 0.25 |
| 3 | நகர்புற வேலைவாய்ப்பு திட்டப் பயிற்சி | 0.46 | 0.22 |
| 4 | நகர்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டம் | 1.30 | 0.70 |
| 5 | சிக்கன நாணய சங்கம் | 0.47 | 0.25 |
| 6 | சமுதாய அமைப்பு | 0.35 | 0.15 |
| 7 | நிர்வாக செலவினம் | 0.30 | 0.10 |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 23 – பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.4**

குளச்சல் நகராட்சியில் 1989–90–ம் ஆண்டு தணிக்கை பத்தி 37–ல் 27 கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்டிட உரிமம் பெறப்படாமல் மேற்படி கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால் அனுமதி இல்லாமல் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு உயந்தபட்சம் அபராத கட்டணம் ஒரு கட்டிடத்திற்கு ரூ. 500/– வீதம் 27 கட்டிடத்திற்கும் சேர்த்து ரூ. 13,500/– அபராதம் விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ. 13, 500/–ம் தள்ளுபடி செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அ.குறிப்பு :** நகராட்சியின் பெரும் பகுதி கடற்கரை பகுதியானதால் கட்டிட அனுமதி பெறாமலேயே கட்டிடம் கட்டப்படுகிறது. கட்டிட அனுமதி கேட்டாலும் கடற்கரை பகுதியிலிருந்து 500 மீட்டருக்கு மேல் தான் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

கட்டிடம் கட்ட அனுமதி வழங்காமல் கட்டிடம் கட்டுபவர்களின் மீது நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும், இதனால் நகராட்சிக்கு இழப்பு ஏதும் இல்லாததை கருத்தில் கொண்டும் தணிக்கையில் குறிப்பிட்ட எல்லா கட்டிடங்களுக்கும் இதுவரை சொத்துவரி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருவதாலும் 1989–90 –ம் ஆண்டு தணிக்கை பத்தி 37–ல் குறிப்பிட்ட தொகை ரூ.13,500/–ஐ நீக்கம் செய்யலாம்.

**தீர்மானம் எண். 24 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சிக்கு பொது சுகாதாரப் பிரிவில் 50 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் குடிநீர் பிரிவு மற்றும் தெருவிளக்குப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரிவதற்கு உரிய பணியாளர்கள் பணியிடம் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ளதால் குடிநீர் விநியோகப்பணி, தெருவிளக்கு இடும் பணி ஆகியவற்றிற்கு சுமார் 15 துப்புரவுப் பணியாளர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக துப்புரவு பணியில் ஈடுபடுத்துவதற்கு போதிய பணியாளர்கள் இல்லாததாலும் மீதமுள்ள துப்புரவு பணியாளர்கள் பணி விடுப்பில் செல்லும்போது துப்புரவு பணி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. எனவே சுமார் 15 துப்புரவு பணியாளர்களை பதலி பணியாளர்களாக பணி செய்திட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக உரிய முறைப்படி, பட்டியல் பெற்று பணி நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற மன்றம் முடிவு செய்யலாம்.

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 25 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

2004 டிசம்பர் திங்கள் 26—ம் நாள் சுனாமி பேரழிவின் போது நகரத்தின் சுகாதாரப் பணியினை மேம்படுத்த மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்று தினக்கூலி அடிப்படையில் 15 நபர்கள் துப்புரவு பணிக்கு 6 மாதங்களாக பணியமர்த்தப்பட்டார்கள். சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்றும் சுகாதார கேடு இருந்து வருகிறது. அப்பகுதிகளில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள நகராட்சியில் போதிய அளவு துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் இன்னும் 3 மாத காலத்திற்கு தினக்கூலி அடிப்படையில் மேற்படி 15 துப்புரவுப் பணியாளர்களை பணியமர்த்தவும், அதற்கான நிதியை சுனாமி நிதி ஒதுக்கீட்டிலிருந்து பெறவும், அனுமதி வழங்கவும் மாவட்ட ஆட்சியரைக் கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 26 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

இந்நகராட்சியில் உதவி செயற் பொறியாளராக (சுனாமி பிரிவு) பொறுப்பேற்றுள்ள திரு.ச. ரவி என்பவருக்கு பயண மாறுதல் படி ரூ. 7540/— சுனாமி நிதியில் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 27 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் 74786/2006/பி3 நாள்: 04.09.2006—ன் படி இந்நகராட்சிக்கு UIDSMT திட்டத்தின் கீழ் பணிகளை தேர்வு செய்து மதிப்பீடுகளும், பிரேரணைகளும் அனுப்பும்படி கோரப்படுகிறது. அதன்படி நகர்மன்றத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி கீழ்கண்ட பணிகளை தேர்வு செய்து அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கொட்டில்பாடு முதல் மரமடி வரை 4 சிறு பாலங்கள் கட்டுதல். | 24,00,000 |
| 2 | வெள்ளியாகுளம் அருகே பாம்பூரி வாய்காலின் குறுக்கே பாலம் கட்டுதல் | 22,00,000 |
| 3 | பொட்டல் ரோடு முதல் (கோமதி மண்டபம் வழி) சன்னதி தெரு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். | 16,50,000 |
| 4 | பாம்பூரி வாய்க்காலில் நான்கு படித்துறைகள் கட்டுதல். | 13,00,000 |
| 5 | வெள்ளிப்பிள்ளையார் கோவில் முதல் பொட்டல் பாலத்தின்கரை வரை தடுப்புச்சுவர், வடிகால் மற்றும் தார் தளம் அமைத்தல். | 8,80,000 |
| 6 | பள்ளிரோட்டில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 8,50,000 |

| | | |
|---|---|---|
| 7 | அழகனார்கோட்டை மற்றும் உய்யாண்டி விளையில் சிமெண்ட் தளம் மற்றும் வடிகால் அமைத்தல். | 6,80,000 |
| 8 | கோணங்காடு ரோட்டில் தார்தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 5,50,000 |
| 9 | நெசவாளர் காலனியில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 2,80,000 |
| 10 | மொகைதீன் பள்ளி தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல். | 2,70,000 |
| 11 | புல்லன்விளை குறுக்கு தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல், காமராஜர் சாலை குறுக்குத் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 1,85,000 |
| 12 | ஆசான் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 1,60,000 |
| 13 | இலப்பவிளை பள்ளிக்கூடம் பின்புறம் கழிவு நீர் வடிகால் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல். | 1,45,000 |
| 14 | காவடிவிளை முதல் (முருகன்கோவில் குளக்கரை) கதவு எண். 30/54 வரை சிமெண்ட் தளம் அமைத்தல். | 1,25,000 |
| 15 | பந்தவிளை குறுக்கு தெருக்களில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 55,000 |
| 16 | காவடிவிளையில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 25,000 |
| 17 | இலப்பவிளை கதவு எண். 30/21 முதல் 30/17 வரை சிமெண்ட் தளம் அமைத்தல். | 20,000 |
| | மொத்தம் | 1,17,75,000 |

**அ.குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 28**

வரிசை எண். 10, 12, 13, 14, 15, 16 மற்றும் 17–ல் கூறப்பட்ட பகுதிகள் அனைத்தும் பண்டகசாலைபுரம் பகுதிக்குட்பட்டவை என்பதனால் மேற்படி வரிசை எண்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து வரிசை எண். 10 எனக் குறிப்பிடவும், காவடிவிளையில் (வ.எண்.16) சாக்கடை ஓடையும் சேர்த்து அமைத்திட (சிமெண்ட் தளத்துடன்) கூடுதலாக ரூ. 60,000/– ஒதுக்கிடவும், ஆகமொத்தம் பண்டகசாலைபுரத்தில், பழைய வரிசை எண்களில் (10, 12, 13, 14, 15, 16 மற்றும் 17) குறிப்பிட்ட வேலைகளை செய்வதற்கு ரூ. 860000/– மொத்தமாக ஒதுக்கீடு செய்யவும், ஏகமனதான தீர்மானிக்கப்பட்டது. UIDSSMT திட்ட மதிப்பீடு பொருளில் கொடுக்கப்பட்டுள்ள ரூ. 1,17,75,000/– என்பதற்கு பதிலாக ரூ. 1,18,35,000/– ஆக உயர்த்திடவும் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 9**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (பொ), திருநெல்வேலி அவர்களின் கடிதம் 3380/2006/ஆ1 நாள்: 18.09.2006–ன் படி இந்நகராட்சிக்கு ஒருங்கிணைந்த வீட்டு குடிசை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (IHSDP) பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. அதன்படி நகர்மன்றத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி கீழ்கண்ட பணிகளை தேர்வு செய்து அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு மதிப்பீடு தயார் செய்து மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | கொட்டில்பாடு மற்றும் ஜோசப் பெனடிக்ட் காலனியில் சமுதாய கூடங்கள் கட்டுதல். | 4,40,000 |
| 2 | துறைமுகத்தெரு I முதல் துறைமுகத்தெரு II வரை கடற்கரை ஓரம் கழிவுநீர் ஓடை கட்டுதல் | 8,00,000 |
| 3 | துறைமுகத்தெரு II முதல் துறைமுகத்தெரு V வரை கடற்கரை ஓரம் கழிவுநீர் ஓடை கட்டுதல் | 10,60,000 |
| 4 | துறைமுகத்தெரு V முதல் துறைமுகத்தெரு பாலம் வரை கடற்கரை ஓரம் கழிவுநீர் ஓடை கட்டுதல் | 12,60,000 |
| 5 | கொட்டில்பாட்டில் 1.00 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டி போர் வெல் மற்றும் பைப் லைன் அமைத்தல் | 12,00,000 |
| | **மொத்தம்** | **47,60,000** |

**அ.குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 29 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் 52150/2006/கு.வ.1 நாள்: 11.09.2006–ன் படி இந்நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கென்று பழுதடைந்துள்ள மோட்டார் மற்றும் பைப் லைனை மாற்றுவதற்கு ரூ. 1.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் பாலத்தன்கரை அருகில் ஒரு போர்வெல் அமைத்து அருகில் உள்ள நீர் தொட்டியுடன் இணைக்கும் படியும் அவ்வாறு செய்தால் அலுவலக வளாகத்தில் உள்ள மேல் நிலை நீர்தேக்க தொட்டிக்கு கூடுதலாக குடிநீர் கிடைக்கும் எனவும் அறிவுரை வழங்கியுள்ளார்கள். ஆகவே நகராட்சிக்கு அனுமதி அளித்துள்ள பைப் லைனை மாற்றும் பணிக்கு பதிலாக புதிதாக ஆழ்துளை கிணறு அமைப்பதற்கும், அதற்காக உத்தேச செலவுத் தொகை ரூ. 1.40–க்கும் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அரசு அனுமதி அளித்துள்ள தொகையான ரூ. 1.00 லட்சத்திற்கு கூடுதலாகும் செலவு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 30 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

மாவட்ட ஆட்சியர் அவர்களின் அலுவலக கடித எண்: வ2/35115/06 நாள்:09.06.06–ன்படி குளச்சல் நகராட்சிக்கு இரண்டாவது மாநில நிதிக்குழு திட்டத்தில் ரூ. 2.40 லட்சத்திற்கு பணியினை தேர்வு செய்து அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. அதன் பேரில் நகராட்சிமன்றத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி தெற்கு கள்ளியடைப்பு சாலையில் காருண்யா பள்ளிகூடம் அருகில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறுபாலங்கள் கட்டும் பணிக்கு ரூ. 2.40 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 31 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12</u>**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட இந்திரா காலனி பகுதியில் அமைந்துள்ள ஆடறுக்கும் கொட்டகையில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டி பழுதடைந்துள்ளது. மேலும் கழிவுநீரை வெளியேற்றுவதற்கும், போதிய வசதி இல்லாமல் உள்ளது. ஆகவே நகராட்சி மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் பேரில் தண்ணீர் தொட்டி கட்டுவதற்கும், கழிவுநீரை வெளியேற்றுவதற்கும் உறிஞ்சி தொட்டி அமைப்பதற்கும் அதற்கான உத்தேச செவினம் ரூ. 9000/—ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 32 – அலுவலக குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:13</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

2004 டிசம்பர் திங்கள் 26—ம் நாள் குளச்சல் நகரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்: 599 நாள் : 24.10.2005—ன்படி குளச்சல் நகராட்சிக்கு அரசு 509.89 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மிக அவசரமானதும், அத்தியாவசியமானதுமான வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளதால் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட 16 வேலைகளையும் ரத்து செய்து விட்டு மிக அவசியமானதும், அத்தியாவசியமானதுமான வேலைகளை தேர்வு செய்திட இம் மன்றம் 30.11.2006—ம் நாளைய அவசரக் கூட்டத்தின் 20—ம் எண் தீர்மானப்படி முடிவு செய்தது. ரத்து செய்யப்பட்ட வேலைகளுக்கு பதிலாக கீழ் குறிப்பிட்ட வேலைகள் செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மலிக்காகிணறு, ஆசாரிமார் தெரு, வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு ஆகிய இடங்களில் தார் தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல். | 34,00,000 |
| 2 | காந்தி சந்திப்பு முதல் மரமடி சந்திப்பு வரை மழைநீர் வடிகால் கட்டுதல். | 24,00,000 |
| 3 | துறைமுகத்தெரு 1—ம் நம்பரில் சிமெண்ட் தளம் மற்றும் கழிவுநீர் ஓடை கட்டுதல். | 10,00,000 |
| 4 | துறைமுகத்தெரு 2—ம் நம்பரில் சிமெண்ட் தளம் மற்றும் கழிவுநீர் ஓடை கட்டுதல். | 10,00,000 |
| 5 | துறைமுகத்தெரு 3—ம் நம்பரில் சிமெண்ட் தளம் மற்றும் கழிவுநீர் ஓடை கட்டுதல். | 10,00,000 |
| 6 | ஈழக்காணிவிளை, மாதாகாலனி ஆகிய இடங்களில் சிமெண்ட் தளம் மற்றும் கழிவுநீர் ஓடை கட்டுதல். | 18,89,000 |
| 7 | மரமடி, ஏசுதாஸ் காலனி, சாம்பசிவபுரம் இடங்களில் சிமெண்ட் தளம் மற்றும் கழிவுநீர் ஓடை கட்டுதல். | 10,00,000 |
| 8 | ஜோசப் பெனடிக்ட் காலனி, அந்தோணியார் காலனி, கொட்டில்பாடு ஆகிய இடங்களில் சிமெண்ட் தளம் மற்றும் கழிவுநீர் ஓடை கட்டுதல். | 15,00,000 |
| 9 | சிங்காரவேலன் காலனி முதல் கொட்டில்பாடு வரை கழிவுநீர் ஓடையும், பள்ளி சந்திப்பு முதல் பெரியநபயகி காலனி வரை மழைநீர் வடிகால் கட்டுதல். | 29,00,000 |

| | | |
|---|---|---|
| 10 | சைமன்காலனி பாலம் முதல் கடற்கரை வரை கழிவுநீர் ஓடை கட்டுதல் | 55,00,000 |
| 11 | குளச்சல் முதல் கொட்டில்பாடு வரையுள்ள பகுதிகளில் நவீன கழிப்பிடங்கள் பராமரிப்பு செய்தல் | 10,00,000 |
| 12 | களிமார் பாலம் முதல் வாய்க்கால் தெரு வரை பாம்பூரி வாய்க்காலில் தடுப்பு சுவர் கட்டுதல். | 1,13,00,000 |
| 13 | வாய்க்கால் தெரு பாலம் மற்றும் தடுப்பு அணை கட்டுதல். | 40,00,000 |
| 14 | வாய்க்கால் தெரு முதல் சைமன்காலனி பாலம் வரை பாம்பூரி வாய்க்காலில் தடுப்பு சுவர் கட்டுதல். | 83,00,000 |
| 15 | மாதாகாலனியில் 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் பர்ணட்டிவிளை, வெள்ளிப்பிள்ளையார் கோவில் பகுதிகளில் 3 ஆழ்துளை கிணறு அமைத்து நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை தொட்டிவரை பிரதானக் குழாய் அமைத்தல். | 30,00,000 |
| 16 | களிமார் பாலம் முதல் சைமன்காலனி பாலம் வரை தார் தளம் அமைத்தல். | 18,00,000 |
| | மொத்தம் | 5,09,89,000 |

**தீர்மானம் எண். 33 – ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:14</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் துணைத்தலைவர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) பர்னட்டிவிளை சந்திப்பிலிருந்து செக்காலத்தெரு ஆரம்பிக்கும் இடம் வரை கழிவுநீர் ஓடை கட்டவும் தேவையான இடங்களில் மூடி போடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) பாலத்தங்கரையிலிருந்து வெள்ளிப்பிள்ளையார் கோயில் வரை ஆக்கிரமிப்பு பகுதிகளை எடுத்து சாலை அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) தும்பக்காட்டுவிளை FII/15-எண் மின்கம்பத்திலிருந்து மேற்காக செல்லும் பாதையில் மூன்று மின்கம்பஙகள் அமைத்து இரண்டு குழல் விளக்குகள் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) தும்பக்காட்டு விளையில் திருமதி. ஆன்லெட் மணி அவர்கள் வீட்டிற்கு செல்லும் பாதையில் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) பர்னட்டிவிளையில் திருமதி. ரெஞ்சிதம் என்பவரின் வீட்டிற்கு முன் நிற்கும் மின்கம்பம் மிகவும் பழுதடைந்து உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் நிலையிலிருப்பதால் மின்கம்பத்தை மாற்ற நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) பர்னட்டிவிளையில் திரு. வின்செண்ட் அவர்கள் வீட்டின் முன்புறம் ரோட்டில் தண்ணீர் திறக்கும் வால்வு ஜங்சன் பயன்படுத்தப்படாத நிலையில் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருப்பதால் அதை மாற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

(7) வெள்ளங்கட்டியிலிருந்து ஒற்றைக்கண் பாலம் செல்லும் புதுத்தெரு ரோடு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

(8) நமது நகராட்சிப் பகுதியில் பெரிய குளமாகிய வெள்ளியாகுளம் அநேக மக்களுக்கு பயன்படும் வகையில் அமைந்துள்ளது. அது இப்போது பராமரிப்பற்று சுகாதாரமில்லாத, சுத்தமில்லாத நிலையில் காணப்படுவதால் அதனை தூர் வாரி சுத்தப்படுத்தி மக்கள் பயன்பெற செய்ய வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

(9) சீம்பிளிவிளையில் F/50, F/51 என்ற இரண்டு மின்கம்பங்களிலும் குழல் விளக்கு பொருத்தப்படாத நிலையில் உள்ளதால் அவற்றில் குழல் விளக்கு பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

(10) பர்னட்டிவிளை சாலையிலிருந்து திரு. ஸ்டீபன் அவர்கள் வீட்டிற்கு செல்லும் பாதையில் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(11) பர்னட்டிவிளை சாலையிலிருந்து கிழக்காக திரு. பிரைட் அவர்கள் வீட்டிற்கு செல்லும் பாதையில் நிற்கும் இரண்டு மின்கம்பங்களில் குழல் விளக்குகள் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(12) இரண்டாவது வார்டு கறுத்தான்விளை பகுதியிலிருந்து கழிவுநீர் ஓடை கட்டி காங்கிரீட் பாதை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(13) பர்னட்டிவிளையிலிருந்து பாலத்தன்கரைக்கு செல்லும் சாலையிலிருந்து தெற்காக செல்லும் பாதையில் மூன்று மின்கம்பங்கள் அமைத்து மூன்று குழல்விளக்குகள் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(14) பர்னட்டிவிளையிலிருந்து பாலத்தன்கரைக்கு செல்லும் பாதையில் திரு. பால்ராஜ் அவர்கள் வீட்டருகில் ஒரு பொதுக்குழாய் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(15) குளச்சல் அரசு நடுநிலைப்பள்ளியின் வடக்கு எல்லை பண்டாரவிளை மக்கள் பயன்படுத்தும் சாலையை செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

(16) குளச்சல் அரசு நடுநிலைப்பள்ளியின் வடகிழக்கு பக்கம் ஒரு மழை அரிப்பு தடுப்புச்சுவர் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

(17) குமரி மாவட்ட கல்வித்துறை அலுவலக பணியாளர்கள் செயற்குழு தீர்மானத்தின்படி குமரி மாவட்ட கல்வி மாவட்டங்கள் மூன்றாக இருப்பதை நான்காக மாற்றி குளச்சலை தலைமை இடமாகக் கொண்டு குளச்சல் கல்வி மாவட்டம் என செயல்பட சம்பந்தப்பட்ட கல்வித் துறையைக் கேட்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 34 – பொருள் எண். 14–ன் துணைப் பிரிவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்:15</u>

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 3–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) சன்னதி தெரு வளைவு வாயில் முதல் முத்தாரம்மன் கோவில் வரை சாலையின் நடுவே சாக்கடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) F-II/25, F-II/34, F-II/45, F-II/60 ஆகிய மின்கம்பங்களில் தெரு விளக்குகள் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) சன்னதி தெரு உள்பக்கம் 2–வது வார்டை இணைக்கும் பாதையை சிமெண்ட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்,

(4) குளச்சல் வாழும் நகர மக்கள் பயன்படுத்தும் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் முத்திரைதாள் விற்பனையாளர் உரிமம் சுமார் இரண்டரை ஆண்டு காலமாக வழங்கப்படவில்லை. அதற்கான உரிமம் வழங்க அரசை கேட்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) குளச்சல் அண்ணாசிலை பகுதி மக்கள் பயன்படுத்துவதற்காக பொது நூலகம் ஒன்று ஏற்படுத்துவதற்கும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) சன்னதி தெரு உள்பக்கம் தொடங்கி கீழத்தெரு சாலையை இணைக்கும் பாதையை சாக்கடை போட்டு சிமெண்ட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 35 – பொருள் எண். 15–ன் துணைப் பிரிவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 5–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பபடு கிராமத்தில் சுனாமி பேரழிவினால் ஏராளமான வீடுகள் இடிந்து போயின. அந்த பகுதியில் தற்சமயம் செடி கொடிகள் வளர்ந்து காடு போல் காட்சி அளிக்கிறது. மேலும் சுகாதார சீர் கேடு ஏற்படுகிறது. இதை கருத்தில் கொண்டு அந்த பகுதியை சுத்தப்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) 5–வது வார்டுக்கும் 6–வது வார்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் மீனவர் ஓய்வு அறை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கிராமத்தில் கிழக்கு பகுதியில் பல ஆண்டுகளாக பேருந்து நிறுத்தம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. அதில் விரைவு பேருந்துகளும் மேற்படி நிறுத்தத்தில் நிறுத்தி செல்ல அனுமதி பெறுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 36 – பொருள் எண். 16–ன் துணைப் பிரிவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 7–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பெரியநாயகி காலனி பாலம் மிகவும் பழுதடைந்து உள்ளது.. அதற்கு பதிலாக அந்த பாலத்தின் கிழக்கு பகுதியில் புதிய பாலம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஜோசப் பெனடிக்ட் காலனி பாலம் பழுதடைந்துள்ளது. அதை இடித்து புதிய பாலம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஜோசப் பெனடிக்ட் காலனி தெற்கு பகுதியில் மீனவர் ஓய்வு அறை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 37 – பொருள் எண். 17–ன் துணைப் பிரிவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:18</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 8 மற்றும் 9–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர்கள் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) ஏசுதாஸ் காலனியில் இருக்கின்ற பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால், அதனை அப்புறப்படுத்திவிட்டு புதிய பாலம் கட்டுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) குளச்சல் மரமடியில் அமைந்துள்ள அந்தோணியார் கோவில் முன்பாக ஏ.வி.எம். கால்வாய்க்கு குறுக்கே அமைந்துள்ள பாலம் மிகவும் பழுதனைந்துள்ளதால் மேற்படி பாலத்தை அப்புறப்படுத்தி விட்டு புதிய பாலம் கட்டுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) மரமடி பகுதியில் கடற்கரை சந்திப்பு அருகில் ஏ.வி.எம். கால்வாய் ஓரமாக அமைந்துள்ள சத்துணவு மையத்திற்கு கிழக்காக அமைந்துள்ள சத்துணவு மையத்திற்கு கிழக்காக ஏ.வி.எம். கால்வாய் குறுக்கே ஒரு புதிய பாலம்அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) ஏ.வி.எம். கால்வாய் கொசு உற்பத்தி கிடங்காக மாறி மிக பெரிய அளவிலான சுகாதார கேட்டை உருவாக்கி கொண்டு இருக்கிறது. எனவே ஏ.வி.எம். கால்வாயை தூர் வாஙகி சுத்தப்படுத்திடவும் அதற்காகும் தொகையை சுனாமி நிதி ஒதுக்கீட்டிலிருந்து பெற்றிட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை கேட்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) வார்டு எண். 8, 9 –க்கு உட்பட்ட பகுதிகளில் தேவையான இடங்களில் சாக்கடை ஓடை அமைத்து, சிமெண்ட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) குளச்சல் கடற்கரை சந்திப்புக்கு கிழக்காக அமைந்துள்ள சத்துணவுக்கூடம் அங்கு படிக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் போதிய இடவசதி இல்லாமல் மிகவும் குறுகலாக உள்ளது. எனவே மேற்படி சத்துணவு மையம் இடவசதி பெறும் வகையிலும், மின்இணைப்பு, குடிநீர் இணைப்பு பெறும் வகையிலும் உரிய வழிவகை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

(7) மரமடி 9–ம் வார்டில் FII/9-எண் மின்கம்பத்தில் புதிய மின் இணைப்பு தருவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 38 – பொருள் எண். 18–ன் துணைப் பிரிவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்: 19**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 11–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :

(1) 11–வது வார்டுக்கு உட்பட்ட கல்லறைத் தோட்டம் அருகில் இருந்து திரு.மார்ட்டீன் வீடு வரையில் கழிவுநீர் ஓடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) திரு. தாசன் ஆசிரியர் அவர்களின் வீடு அருகாமையில் இருந்து கடற்கரை பிளாட் வரை கழிவு நீர் ஓடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 39 – பொருள் எண். 19–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்:20**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 13–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்

(1) 13–வது வார்டில் உள்ள நான்கு கழிப்பிட கட்டிடங்களில் மின்சாரம், தண்ணீர் குழாய்கள், கதவுகள், சுவர்கள் முதலியன மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. அதை பராமரிப்பு பணி செய்து முழுமையாக பயன்படும் வகையில் நிவிர்த்தி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) கதவு எண். 14/61 திரு வர்க்கீஸ் வீடு பக்கம் ரோட்டிலிருந்து கழிவுநீர் ஓடை அமைத்து முழுதும் சிமெண்ட் தரை அமைக்கவும், 19/40 வீட்டு பக்கம் சிமெண்ட் தரை போடவும் புதிய எண். 13/60 வீட்டு பகுதியில் கழிவுநீர் ஓடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) புதிய எண். 13/65 வீட்டு பகுதியில் அதிகமான வீடுகள் குடிநீர் குழாய் இணைப்பு இல்லாத காரணத்தால் அப்பகுதியில் மக்கள் நலன் கருதி ஒரு தெரு குழாய் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) குளச்சல் சைமன்காலனி இணைப்பு பாலம் அருகில் ரோட்டின் வடக்கு பக்கம் வாய்க்கால் தெரு அருகில் ஒரு நிழற்கூடம் அமைக்கவும், பஸ்கால அட்டவணை ஒன்று அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) அநேக குடும்பங்களுக்கு வறுமைக்கோட்டு எண் இல்லாத காரணத்தால் அரசு உதவி பெற முடியவில்லை. எனவே அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 40 – பொருள் எண். 20–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 21</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 14–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சைமன் காலனி பாலம் அருகில் தெற்கு பகுதியில் சாக்கடை பாம்பூரி வாய்க்காலில் கலக்கிறது. இதனால் கொசுத் தொல்லையும், மக்கள் குளிப்பபதற்கும் வசதி இல்லாமல் மிகுந்த சிரமப்படுகிறார்கள். எனவே மேற்படி சாக்கடையினை கடலில் இணைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) புனித மேரி ஆரம்பப் பள்ளிக்கு மேற்கு பக்கம் திரு.வின்செண்ட் வீட்டு முன்பாக பழுதடைந்துள்ள சிறிய ஓடையினை பழுது பார்க்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) புனித மேரி ஆரம்பப்பள்ளியின் மேற்கு பக்கம் ஓடை கட்டுவதற்கும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) புனித மேரி பள்ளிக்கூடம் அருகில் திரு. தாசன் வீட்டு பக்கம் மின்கம்பம் ஒன்று பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 41 – பொருள் எண். 21–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:22</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 16–வது வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

16–வது வார்டில் காந்தி சந்திப்புக்கு தெற்காக சாலையின் மேற்கு பகுதியில் எண். 16/315–1 வீட்டருகில் ஒரு குடிநீர் பொதுக்குழாய் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 42 – பொருள் எண். 22–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:23</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 17–வது வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

குளச்சல் நகராட்சி எல்கைக்கட்பட்ட 17–ம் வார்டு உய்யாண்டிவிளை பகுதியில் அமைந்துள்ள பொதுக் கழிப்பறையின் செப்டிக் டாங்க் உடைந்தும், கோப்பைகள் மற்றும் கதவுகள் சேதமடைந்தும் பயன்படுத்த முடியாமல் உள்ளதால் மேற்படி கழிப்பிடத்தை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 43 – பொருள் எண். 23–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:24</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 19–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) நெசவாளர் தெரு வடக்கு மற்றும் தெற்கு தெருவில் இரண்டு பொது கிணறுகள் உள்ளது. அவற்றின் மேல் மூடியிட்டு சின்டெக்ஸ் பொருத்தி மோட்டார் வைத்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) வடக்கு தெருவில் காங்கிரீட் தளம் அமைத்து 10 ஆண்டுகளுக்க மேல் ஆகிறது. சரியான நிலையில் ரோடு இல்லாமல் இருப்பதால் வடக்கு தெரு முழுவதும் சிமெண்ட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 44 – பொருள் எண். 24–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:25</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 20–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

குளச்சல் மெயின் ரோட்டில் S.B.T. வங்கியின் முன்பு பயணிகள் நிழற்கூடை உள்ளது. தற்போது நிழற்கூடை மிகவும் மோசமான நிலையில் எந்த நேரமும் கீழே உடைந்து விழும் சூழ்நிலையில் இருக்கின்றது. அருகில் உள்ள புனித மேரி மேல்நிலை பள்ளி மாணவர்கள், வங்கிக்கு வருபவர்கள் நிழலகத்தில் அமர்வது வழக்கம். மக்கள் அமர்ந்திருக்கும் போது ஏதாவது சம்பவங்கள் நடந்தால் உயிர் சேதத்திற்கு கூட வாய்ப்பு இருப்பதால் மக்கள் நலன் கருதி உடனடியாக அதனை அப்புறப்படுத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 45 – பொருள் எண். 25–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:26</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 21–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) குளச்சல் நகரம் சுனாமியால் பாதித்த நகரம். ஆகவே சுகாதாரமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கொடுப்பது நகராட்சியின் முக்கிய கடமை. ஆகவே குளச்சல் நகராட்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகிய குடிநீர் சுத்திகரிப்பதற்கு குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம் ( Water Filter Machine) வாங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) குளச்சல் நகரம் இந்தியாவின் புராதன நகரங்களில் (Heritage Town) ஒன்றாக விளங்குகிறது. இந்நகரை அழகுபடுத்தும் முகமாக குளச்சல் பீச் சந்திப்பு முதல் வி.கே.பி. மேல்நிலை பள்ளி வரை ரோட்டில் உள்ள மின்கம்பங்களில் சோடியம் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) குளச்சல் அண்ணாசிலை, காந்தி ஜங்சன், பீச் சந்திப்பு ஆகிய இடங்களில் றவுண்டானாக்கள் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) குளச்சல் நகரில் அடிக்கடி ஏற்படும் மின்தடையால் மக்களும், நகரமும் மிகவும் பாதிப்படைகிறது. மின்தடையால் மக்களுக்கு நகராட்சியால் குடிநீர் ஒழுங்காக கொடுக்க முடியவில்லை. இந்த நிலையை சரி செய்ய மின்சாரம் தடைபட்டாலும் பம்பு ஹவுஸ் மின் மோட்டாரை இயக்குவதற்கு ராட்சஸ ஜெனரேட்டர் வாங்குவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 46 – பொருள் எண். 26–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்: 27</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 22–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) பள்ளி ரோட்டில் அமைந்து இருக்கும் பெரிய பள்ளி அருகில் ஓடும் சாக்கடை இடிந்த நிலையில் இருப்பதால் அதனை சரிசெய்வதற்கும், அதேப் பகுதியில் ஒரு பொது நல்லி அமைப்பதற்கும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தனது 83 வயதிலும் தமிழுக்காக தமிழ் மக்களுக்காக தன்னுடைய பேச்சாற்றலாலும் தமிழுக்கே தமிழாக இருக்கும் பார் போற்றும் அன்பு தலைவர் அவர்களுக்கு குளச்சல் நகராட்சி மன்றத்தில் உருவப்படம் வைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) முன்னாள் வைஸ் சேர்மேன், ஒசனார் பிள்ளை வீட்டின் எதிர்புறம் புதிய தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) இலப்பவிளை உயர்நிலைப்பள்ளி எதிரே உள்ள தெருவில் 3 இடங்களில் புதிய தெருவிளக்குகள் அமைக்கவும் மற்றும் இடிந்த நிலையில் இருக்கும் கால்வாய்களை புதிய கட்டுமான பணிகள் செய்யவும் அதன் மேல் மூடி போடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) நமது நகரத்தில் மக்கள் குப்பை கொட்டுவதினால் ஏற்படும் சுகாதாரக்கேட்டை போக்கி அண்டை மாநிலமான கேரளாவில் வீட்டிற்கு ஒரு குப்பை கொட்டும் பக்கெட் வினியோகித்து சுகாதாரகேட்டிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்கள். அதைபோல் நம் நகராட்சியிலும் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) 22–வது வார்டில் சிறிய காங்கிரீட் சப்பாத்துக்கள் கிராசிங்க் ஒடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(7) உறுப்பினர்களாகிய எங்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டையும் நகராட்சியினுடைய சட்டதிட்ட கைடு அதில் நகராட்சி உறுப்பினர்களுடைய அதிகார உச்ச வரம்பு என்ன என்பதை உள்ளடக்கிய கைடுகள் வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 47 – பொருள் எண். 27–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்:28</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 23–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) வெள்ளியாகுளம் பகுதியில் வாய்க்கால் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மிக குறகலாக உள்ளதால், பாம்பூரி வாய்க்கால் மறுகரையில் அமைந்துள்ள பரமசிவன் கோவிலுக்கு வாகனங்கள் செல்ல இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே 5 மீட்டர் அகலத்தில் அப்பகுதியில் புதிய பாலம் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்,

(2) பொதுமக்கள் நலன் கருதி வாய்க்கால் கரையோர மக்களுக்கு வயல்கரை வழியாக ஏற்கனவே இருந்து வரும் பாதையை 6 அடி சிமெண்ட் பாதையாக மாற்றம் மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) பறம்புவிளாகம் பகுதியை சார்ந்த பொதுமக்களுக்கு மின்சார வசதியே கிடையாது. ஆகவே அந்த பகுதியில் புறம்போக்கு நிலம் இருப்பதை கண்டறிந்து அந்த பகுதி மக்களுக்கு மின்வசதி செய்து கொடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்,

(4) ஜேம்ஸ் மருத்துவமனையின் மருத்துவ கழிவுகளை மழைநீர் வடிகால்வாயில் விழுவதை போர்க்கால அடிப்படையில் தடை செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) குளச்சல் முளகுமூடு சாலையில் புல்லன்விளை திருப்பிலிருந்து அரசு தொடக்கப்பள்ளி வரை மழைநீர் வடிகால் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 48 – பொருள் எண். 28–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 29</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 24–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :</u>

(1) குளச்சல் காமராஜர் சாலையிலிருந்து திருமதி. சாந்தா அவர்கள் வீட்டு முன்பாக செல்லும் சிமெண்ட் தள சாலையை முழுமையாக சீரமைத்து பாதாள சாக்கடை ஓடையும் அமைத்து புதிய சிமெண்ட் தள சாலை அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) புல்லன்விளைச் சாலையிலிருந்து திரு. மாசில்லா மணி வீடு வரைக்கும் செல்லும் பொதுப் பாதையில் சிமெண்ட் தளம் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) புல்லன்விளை சாலையிலிருந்து நெசவாளர் தெரு பகுதி மக்கள் வாழுகின்ற குடியிருப்புகள் வரைக்கும் பொதுப் பாதையை சிமெண்ட் தள சாலையாக அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 49 – பொருள் எண். 29–ன் துணைப் பொருட்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி

## <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் டிசம்பர் 27–ம் நாள் காலை10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

### <u>பொருள்கள்</u>

**<u>பொருள் எண். 1</u>**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்கிக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.அ.நிர்மலா ஜாய், இளநிலை உதவியாளர் | 11/2006 | 205/– |
| 2 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | 11/2006 | 496/– |
| 3 | திரு.ஆர்.தங்கராஜ். து;ப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 11/2006 | 664/– |
| 4 | திருமதி.கே.மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 10/2006 | 188/– |

**அ.குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 50 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

இந்நகராட்சியில் சுனாமி பிரிவின்கீழ் இளநிலைப் பொறியாளராக பணிபுரியும் திருமதி. இமாக்குலேட் ஹெலன் என்பவர் பயணம் மேற்கொண்ட வகையில் தொகை வழஙகிக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. 10/2006 – 1155.50
11/2006 – 979.50

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 51 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளிலுள்ள செப்டிக் டாங்க் காற்றுக் குழாய்களில் கொசுக்கள் உள்ளே புகுந்து சென்று இனவிருத்தி அடையாமல் இருக்கவும், மேற்படி செப்டிக் டேங்குகளில் இருந்து கொசுக்கள் வெளியே வராமல் இருக்கவும், காற்றுக் குழாய்களில் நைலான் வலை கட்டவும் மேற்படி வலையினை கட்டுவதற்கான ஸ்டீல் கட்டு கம்பியும் தேவைப்படுகிறது. மேற்படி பொருட்களை அத்தியாவசியத்தின் பேரில் வாங்கிய வகையில் சம்மந்தப்பட்டவர்களுக்கு ரூ. 3036/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின்பேரில் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவினத் தொகையாக ரூ. 3036/– வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 52 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி மினி லாறி TN-74Z- 2339–க்கு 6 டயர்க்கு ரீபட்டன் போடுவதற்கும் டயர் ரிப்பேர் செய்வதற்கும் உத்தேசச் செலவு ரூ. 10,000/–க்கு தீர்மானம் எண். 1171 நாள் 16.11.2005–ல் மன்ற அனுமதி வழங்கப்பட்டது. அதன் பேரில் மினி லாறி டயர்களுக்கு ரீபட்டன் மற்றும் பேச் ரிப்பேர் முடிந்து வரும் போது ரூ. 10549/– ஆனதாக செலவுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி மினி லாறி ரீபட்டன் மற்றும் பேச் ரிப்பேர் செய்யுப்பட்டதில் ரூ. 10549/– க்கு ரூ. 10,000/– ம் வழங்கப்பட்டது. கூடுதலாக செலவான ரூ. 549/– யை சம்மந்தப்பட்டவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : கூடுதலாக செலவான :ரூ. 549/– ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 53 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 3–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :

(1) குளச்சல் பழையக்கடை தொடங்கி மேலத்தெரு வரை சாக்கடை மேல் மூடி போட மன்றம் தீர்மானிக்கலாம்.
(2) சன்னதி தெரு முத்தாரம்மன் கோவில் மேலங்கோடு இசக்கியம்மன் கோவில் இரண்டுக்கும் இடைப்பட்ட இடத்தில் புதிய மின்கம்பம் போட்டு தெரு விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 54 : பொருள் எண். 5–ன் துணைப்பொருட்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் 6–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :

(1) ஏ.வி.எம். சானலின் குறுக்கே கொட்டில்பாடு நடுத்தெருவிலிருந்து ரோட்டிற்கு செல்ல ஒரு பாலம் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.
(2) சுனாமியால் பாதிக்கப்பட்ட கொட்டில்பாடு பகுதி மக்களின் புதிய குடியிருப்புகளுக்கு கிழக்காக வெள்ளிப்பிள்ளையார் கோயில் வரைச் செல்லும் சாலையை தார் சாலையாக அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 55 பொருள் எண். 6–ன் துணைப்பொருட்கள் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 16—ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) 16—வது வார்டில் காந்தி சந்திப்புக்கு தெற்காக சாலையின் மேற்கு பகுதியில் வாய்க்கால் தெருவில் வீட்டு எண். 16/332 அருகில் FII/24—எண் மின்கம்பத்தில் ஒரு குழல் விளக்கு அமைத்து புதிய மின் இணைப்பு தர மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) இதே பகுதியில் மின்கம்ப எண். FII/46 –லும் 16/346 எண் வீட்டு அருகில் FII/48—எண் மின்கம்பத்திலும் குழல் விளக்கு அமைத்து புதிய மின் இணைப்பு தருவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள நீர்தேக்க தொட்டியின் அடியில் சைக்கிள் ஸ்டாண்ட் அமைத்து நகர மக்களின் தேவையை நிவிர்த்தி செய்து நகராட்சியின் வருமானத்தை பெருக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) மார்க்கெட் ரோடு அருகில் நிரவுவிளையில் திரு. தேவசிகாமணி அவர்கள் வீட்டு அருகில் உள்ள மின்கம்பத்தை தொடர்ந்து இரண்டு மின் கம்பஙகள் நட்டு ஒரு மின்கம்பத்தில் குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 56 பொருள் எண். 7—ன் துணைப்பொருட்கள் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 17—ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) பள்ளிவிளாகம் அம்மன்கோயில் முன்பு ஒரு சோடியம் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) அழகனார்கோட்டைவிளை பத்மநாபசுவாமி கோயில் முன்பு ஒரு சோடியம் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) களிமார் பஜனை மடம் கோயில் முன்பு ஒரு சோடியம் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) சிங்கன்காவு கோயில் முன்பு ஒரு சோடியம் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) களிமார் அம்மன்கோவில் முன்பு ஒரு சோடியம் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) FII-67, FII-43, FII-35 ஆகிய மின்கம்பஙகளில் புதிய லைட் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(7) குளச்சல் நரிக்கல் சிவன் கோயில் பின்புறம் அருகு சுவர் கட்டி ஒரு சிறிய பாலம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(8) களிமார் நரிக்கல் வாய்க்காலில் ஆடு மாடு கழுவ சப்பாத்து ஒன்று அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 57 பொருள் எண். 8—ன் துணைப்பொருட்கள் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9</u>**

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 10—ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

1. 10—வது வார்டில் உள்ள நவீன கழிப்பிடங்களை பழுது பார்க்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. 17—22எ, திரு. ஜெலஸ்டின் மற்றும் 17—22பி, திரு. மிய்யேல் பிள்ளை இவர்கள் வீட்டின் பின்புறம் புதிதாக கழிவு நீர் ஓடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. 11—61, திரு. வெஞ்சிலாஸ் மற்றும் 11—62, திரு. ரெத்தினதாசன் இவர்கள் வீட்டு முன்னால் சிமெண்ட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

4. 11–53, திரு. அமிர்தைய்யா வீட்டின் முன்பிலிருந்து கடற்கரை வரை கழிவு நீர் ஓடை அடிக்கடி அடைவு பட்டுள்ளது அதை சரி பார்க்க மன்றம் தீர்மானிக்கலாம்.
5. குளச்சல் நகரில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் மக்களுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே தேவையான மின்திறன் கொண்ட ஜெனரேட்டர் வாங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 58 பொருள் எண். 9–ன் துணைப்பொருட்கள் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 10</u>

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 18–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் வீதிக்கும் கிரீன் தெருவிற்கும் இடைப்பட்ட பகுதியில் சாலையின் நடுவில் F/III-28 என்ற எண்ணுள்ள மின்கம்பம் உள்ளது. இந்த மின்கம்பம் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கம் இடையூறாக உள்ளது. எனவே இந்த மின்கம்பத்தை இடம் மாற்றி அமைத்திட மின்வாரியத்தை கேட்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஈழக்காணிவிளை பகுதியில் மின்கம்பம் எண். FII-62 மற்றும் F/II-63 கிரீன் தெருவில் மின்கம்ப எண். F/III-17 முதலியவற்றில் புதிதாக ஒரு தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 59 பொருள் எண். 10–ன் துணைப்பொருட்கள் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 11</u>

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 24–ம் வார்டு நகராட்சி மன்ற உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம்</u>

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் ரோடு, பள்ளிவிளாகம் சாலையில் நரிக்கல் வரை கழிவுநீர் ஓடை சிலாப் போட்டு மூட மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) காமராஜர் சாலை, புல்லன்விளை, பள்ளிவிளாகம் சாலைகளில் குப்பைகளை கொட்ட குப்பைத் தொட்டி வைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை மெயின்ரோடு வரை கழிவுநீர் ஓடை சுத்தம் பண்ணி சிலாப் போட்டு மூட மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை மத்தியில் இருந்து நரிக்கல் ரோடு வரை கழிவுநீர் ஓடை அமைத்து சிலாப் போட்டு மூட மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் அமைந்துள்ள ஆழ்குழாய் பைப் (அடி பம்பு) செயலற்று கீழே விழுந்துள்ளது. அந்த இடத்தில் ஆழ்குழாய் Bore–ஐ சுத்தம் செய்து Sintex Tank வைத்து தண்ணீரை மோட்டார் மூலம் டாங்கில் நிரப்பி காமராஜர் சாலை வாழ் மக்கள் தேவைக்கேற்ப தண்ணீர் எடுக்க பைப் வசதி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 60 பொருள் எண். 11–ன் துணைப்பொருட்கள் ஏற்றுக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி.

(உண்மை நகல்)

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி